பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 27 திங்கட்கிழமை 13.12.2021 கதிர் 38

**இனி இது ரகசியம் அல்ல!**

வடக்கு அரசியலில் இப்போது சர்ச்சைக்குரிய பிரமுகர் மேயர் மணிவண்ணன். அவருக்கு ஆதரவாகவும், எதிராகவும் நிலைப்பாடுகள் தாராளமாக உண்டு. அவரின் அரசியல் எதிர்காலம் பற்றிய விவகாரம் நாளை மறுதினம் பரிசீலனைக்கு வருகின்றது. பக்கம்02

# பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்கின்றது இந்தியா

## அவசர திட்டப் பொதிகள் தயார்

புதுடில்லி, டிசெம்பர் 13

பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கையை அதில் இருந்து மீட்டெடுக்கும் அவசர உதவித் திட்டப் பொதிகளைத் தயாரிப்பதில் இந்தியா மும்முரமாக இருக்கின்றது.

– இந்தியாவின் பொருளாதார விடயங்களைக் கையாளும் பிரபல பத்திரிகையான ‘எக்னமிக் டைம்ஸ்’ தினசரி இந்தத் தகவலை பெயர் குறிப்பிடப்படாத உயரதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி நேற்று முன்தினம் வெளியிட்டிருக்கின்றது. 2

## தகவல் அறியும் சட்டத்தை செயலிழக்க அரசு முயற்சி

### மைத்திரி குற்றச்சாட்டு



தகவல் அறியும் சட்டத்தை செயலிழக்கச் செய்ய அரசு முயற்சிக்கின்றது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்.பி. குற்றம் சுமத்தினார்.

கேகாலையில்நேற்றுநடைபெற்ற நிகழ்வொன்றின் 08

## கொரோனாத் தொற்றால் மேலும் 19 பேர் உயிரிழப்பு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 13 ஆண்களும், 6 பெண்களும் அடங்குகின்றனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் 2

## யாழ்ப்பாணம், மன்னார் மீனவர்களிற்கு சீனா நிவாரணப் பொதிகள், வலைகள்

### அவற்றை வழங்கி வைக்க அந்நாட்டுத் தூதர் வருகிறார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.13

சீனத் தூதரகத்தின் அன்பளிப்பில் யாழ்ப்பாணம், மன்னார் மீனவர்களிற்கு வரும் வியாழக்கிழமை நிவாரணப் பொருகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சீன தூதரகத்தால் வழங்கப்படவுள்ள இந்தநிவாரணவிநியோகத்திற்காக 15 ஆம் திகதி சீனத் தூதுவர் யாழ்ப்பாணம் 2

## ஆளுநர் நியமனத்துக்கு அரசுக்குள்ளேயே எதிர்ப்பு



வடமேல் மாகாண சபைக்கான ஆளுநராக வசந்த கரன்னாகொட நியமிக்கப்பட்டுள்ளமை தவறாகும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்றஉறுப்பினர்டிலான்பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

வடமேல் மாகாண ஆளுநராகசெயற்பட்ட ராஜா கொல்லுரே உயிரிழந்தார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு முன்னாள் அமைச்சர் டியூ குணசேகர நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அவரே 2

## மிதிவெடி வெடித்ததில் சிறுவன் பரிதாபச் சாவு

திருகோணமலை, மூதூர் – இக்பால் நகர் பகுதியில் மிதிவெடி வெடித்ததில் சிறுவன் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்று மாலை 3.50 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இக்பால் நகர் பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுவனே இதன்போது உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிறுவனின் சடலம் தோப்பூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நீதிவான் விசாரணைகளின் பின்னர், பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமுன்னெடுத்துவருகின்றனர்.

## முல்லை கடலில் சிவப்புக் கொடி!

முல்லைத்தீவு கடற்பகுதியில் பாதுகாப்பற்ற பகுதிகளில் நீராடுவதற்குத் தடை விதித்து சிவப்பு நிற கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

பொலிஸ், கடற்படை மற்றும் பிரதேச மீனவர்கள் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

அண்மையில் முல்லைத்தீவு கடற்பகுதியில் நீராடச்சென்ற நிலையில்வவுனியாவைச்சேர்ந்த 3 இளைஞர்கள் உயிரிழந்தனர்.

குறித்த சம்பவத்துக்குப் பின்னர் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் 2

## 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு பைசர்

20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் மூன்றாம் கொரோனாத் தடுப்பூசியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இரண்டு கொரோனாத் தடுப்பூசிகளையும் மூன்று மாதங்களுக்கு முன்னர் பெற்றுக்கொண்ட 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாம் தடுப்பூசியாக பைசர் வழங்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத்தடுப்பூசியைப்பெறுவதற்குத் தகுதி 2



தென்னாடு

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

மார்கழிப் பெருவிழா - 2021

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.

**காலம்** - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)
இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

**இனி இது...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆம், அவரது இரண்டாவது வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் புதன்கிழமையன்று நடைபெறுகின்றன.

யாழ்.மாநகர சபையில் எந்தத் தரப்புக்கும் தனித்துப் பெரும்பான்மை இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஈ.பி.டி.பிக்கும் இடையிலான பிளவில் – பிரிவில் – தடி நட்டு, அதில் மேயர் பதவி கொடியைப் பறக்க விட்டிருக்கின்றார் மணிவண்ணன்.

அவர், தமிழ்க் கூட்டமைப்பை எதிர்த்து, மேயர் பதவியைப் பிடிப்பதற்கு உதவியது ஈ.பி.டி.பி. ஆனால் இம்முறை வரவு – செலவுத் திட்டம் நிறைவேற ஈ.பி.டி.பி. ஒத்துழைக்குமா, காலை வாருமா, அல்லது தமிழ்க் கூட்டமைப்பே காலை வாராமல் விட்டுப் பிடிக்குமா என்பவை எல்லாம் இன்னும் தெளிவில்லாத மர்மங்கள்.

பெரும்பாலும் இந்த இரண்டு கட்சிகளும் தத்தமது நிலைப்பாட்டைக் கடைசி நேரத்தில்தான் அறிவிக்கும் என்று தெரிகின்றது.

நாளை மறுதினம் 'பட்ஜெட்' விவாதம் ஆரம்பமாக முன்னர் தமது கட்சி எடுக்க வேண்டிய நிலைப்பாட்டை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமது மாநகர சபை உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துவார் என நினைக்கிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை நாளை மாலை அக்கட்சியின் தலைமை தனது மாநகர சபை உறுப்பினர்களை அழைத்து, கலந்தாலோசனை நடத்தி, ஒரு முடிவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேயர் மணிவண்ணனின் பதவியைத் தக்க வைக்கும் முடிவை ஈ.பி.டி.பி. எடுத்தால், அதனை நடைமுறை சாத்தியமாக்குவதற்கு அக்கட்சியின் மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரும் தங்களுக்குள்ளும் –

அதேபோன்று மேயர் மணிவண்ணனின் பதவியைப் பறிப்பது என்ற முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்தால், அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு அக் கட்சியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் சகலரும் தங்களுக்குள்ளும் –

முதலில் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.

அடுத்து இன்னொரு விடயம் சட்டம் தொடர்பான பிரச்சினையாக முன்வைக்கப்படுகின்றது.

தற்போதைய மேயர் மணிவண்ணனை அவரது இந்த வரவு – செலவுத் திட்டம் மூலம் தோற்கடித்தால் – பதவியை விட்டு இறக்கினால் – யாழ்.மாநகர சபையே கலைந்து விடும், யாழ்.மாநகர நிர்வாகம் ஆணையாளரிடம் போய் விடும், அடுத்த தேர்தல் நடைபெறும் காலம் வரை மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி இல்லாமல் போய் விடும், ஆகவே மேயர் மணிவண்ணனைப் பதவி இறக்கும் முயற்சி, மக்கள் பிரதிநிதித்துவ முறைக்கு ஆப்பு வைக்கும் நடவடிக்கை என்றெல்லாம் பல தரப்புகளினாலும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

அப்படி ஒரு சட்ட வாதத்துக்கு வாய்ப்பு இல்லை என்று அடியோடு மறுத்து விட முடியாது. இது போன்ற ஒரு சிக்கல் இலங்கையில் எங்ஙனுமே முன்னர் வராததால் இந்த சர்ச்சையை ஏற்படுத்தும் சட்டப் பிரிவு இன்னும் சட்டப் பரிசீலனைக்கோ, சட்ட வியாக்கியானத்துக்கோ உள்ளாகவில்லை. அதனால் மேற்கண்ட வகையிலும் அந்த சட்டப் பிரிவை அர்த்தப்படுத்தலாம், அதை மறுக்க முடியாது என மாகாண உள்ளூராட்சி திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இவ்விடயம் நீதிமன்றுக்குப் போனால் தாக்குப் பிடிக்குமா என்பதுதான் கேள்வி.

2012 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 48ஆம் பிரிவில் உபபிரிவு 66 'பி' மூலம் திருத்தியமைக்கப்பட்ட விடயமே இப்போது சர்ச்சையைக் கிளப்புகின்றது.

இந்த விடயத்தில் சட்டவாசகங்களைப் பிடித்துக் கொண்டு நின்று விளக்கம் கூறி, கோரி, நான் வாசகர்களைக் குழப்பப் போவதில்லை. சாதாரண பாமரனின் வாசகத்தில் – வசனத்தில் – விடயத்தைக் கூற விரும்புகிறேன்.

ஒரு மாநாகர சபையின் மேயர் (பிரதேச சபையாயின் தவிசாளர், நகர சபையாயின் நகர பிதா) சமர்ப்பித்த வரவு – செலவுத் திட்டம் முதல் தடவை தோற்கடிக்கப்பட்டு, அடுத்த இரண்டாவது வாரத்தில் இரண்டாவது தடவையும் திரும்பவும் தோற்கடிக்கப்பட்டால் அவர் பதவியிழந்தவராவார். அப்படித்தான் யாழ்.மாநகர மேயராக இருந்த ஆர்னோல்ட் பதவியிழந்தார்.

அவரது இடத்துக்கு வரும் புதிய மேயர் சமர்ப்பிக்கும் வரவு – செலவுத்திட்டமும், அடுத்தடுத்து இரண்டு வாரங்களுக்குள் தோற்கடிக்கப்படுமானால் அந்த சபை கலைந்தாகி விடும் என்பதுதான் சட்ட ஏற்பாடு.

2020 கடைசியில் ஆர்னோல்ட் யாழ்.மாநகர மேயராக இருந்து அவரின் வரவு – செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோற்டிக்கப்பட்டமையை அடுத்து மணிவண்ணன் புது மேயரானார். அவரின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் அப்போது நிறைவேறி, அவர் ஓராண்டு மேயராகவும் பணி புரிந்து விட்டார்.

இப்போது 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை அவர் சமர்ப்பிக்கின்றார். அது இரண்டு தடவையும் தோற்கடிக்கப்படுமானால் அவரும் பதவியிழந்து சபையும் கலைந்ததாகும் என ஒரு சட்ட வியாக்கியானம் சில தரப்புகளால் கொடுக்கப்பட முயற்சிக்கப்படுகின்றது.

ஒரு மேயர் பட்ஜெட் தோற்றமையால் பதவி இழந்து, அந்த இடத்துக்குத் தெரிவு செய்யப்படும் புதிய மேயரின் பட்ஜெட்டும் அடுத்து இரண்டு தடவைகளும் தோற்கடிக்கப்பட்டால் புதியவரும் பதவியிழந்து சபையும் கலையும் என்பது ஒரே ஆண்டுக்குரிய பட்ஜெட்டுக்குரிய ஏற்பாடே தவிர, அந்த சட்டப் பிணைப்பு அதற்கு பின்னால் வருகின்ற எல்லா பட்ஜெட்டுகளுக்கும் பொருந்தும் என்று சட்ட வியாக்கியானம் கொடுப்பது ஜனநாயகத்துக்கே சாவுமணி, விரோதம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த முறை யாழ்.மாநகர பட்ஜெட்டில் மேயர் மணிவண்ணன் சமர்ப்பிக்கும் திட்டம் இரண்டு முறையும் தோற்கடிக்கப்பட்டு அவர் பதவி இழந்தால், அதற்காக சபையைக் கலைக்க முடியாது, கலைக்க கூடாது. பதிலாக புதிய மேயர் தெரிவு செய்யப்பட வேண்டும். அவரின் பட்ஜெட்டும் இம்முறை இரண்டு தடவைகளும் தோற்டிக்கப்பட்டால்தான் சபை கலைந்ததாக அர்த்தமாகும். அவ்வாறுதான் சட்டத்தை வியாக்கியானப்படுத்த வேண்டும் என்று வடக்கு, மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் பட்ரிக் டிரஞ்சனுக்கு எழுத்தில் தெரியப்படுத்தியிருக்கினறார்.

இந்தச் சட்ட மயக்கத்தைக் காட்டி மேயர் மணிவண்ணனின் பதவியைத் தக்க வையுங்கள் அல்லது சபை கலையும் என்ற அச்சுறுத்தல் யாழ்.மாநாகர சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

சபை கலைந்தால் தங்கள் உறுப்பினர் பதவிக்கும் ஆபத்து என்ற பீதியில் மூழ்கிக் கிடக்கும் உறுப்பினர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? நாளை மறுதினம் முடிவு தெரியும்.

★ ★ ★

தமிழ்க் கட்சிகளின் நேற்றைய கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மிஸ்ஸிங். கூட்டமைப்புத் தலைவராகப் பங்குபற்றிய சம்பந்தன், தமிழரசுக் கட்சியையும் சேர்ந்தவர் என்பதால் அக்கட்சியும் கலந்து கொண்டது என்பது போல கூட்ட முடிவில் படம் காட்டப்பட்டது. ஆனால் தமிழரசுக் கட்சிக்கு – குறிப்பாக அதன் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு – அழைப்பு அனுப்பப்படாதமை தொடர்பில் சம்பந்தன் மிகுந்த மனவருத்தத்தில் இருந்தார்.

13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப் படுத்துமாறு இந்தியாவைக் கோரும் ஓர் ஆவணத்தில் எல்லாத் தலைவர்களும் ஒப்பமிட வேண்டும் என்பது ஏற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்பு. அதற்கான நகல் வடிவத்தையும் கூட்டத்துக்குத் தயாராகக் கொண்டு வந்தனர். ஆனால் ஒப்பமிட சம்பந்தன் மறுத்துவிட்டார். எனது கட்சியுடன் கலந்தாலோசித்த பின்னர் தான் எந்த முடிவும் என அடித்துக் கூறி விட்டமையால், 21ஆம் திகதி மீண்டும் கூட முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

ஆனால், 13ஆவது திருத்தம் தொடர்பில் சுன்னாகம் கூட்டத்தில் சுமந்திரன் ஆற்றிய உரையை – கருத்தை – நோக்கும் போது இந்த ஆவணத்தில் தமிழரசு மற்றும் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ஆகியோர் ஒப்பமிடுவதற்கான வாய்ப்புகள் மிகமிகக் குறைவாக இருப்பதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

மேல் விவரங்களைப் பின்னர் தருகிறேன்.

– மின்னல் –

---

**கொரோனாத்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்க ளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 614 ஆக அதிகரித்துள்ளது.

---

**ஆளுநர் நியமன...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொருத்தமானவர்.

எனவே, வசந்த கரன்னாகொடவின் நியமனம் ஏற்புடையது அல்ல. இவ்வாறு தான் சிற்சில இடங்களில் அரசு தவறிழைக்கின்றது. அந்தத் தவறுகளைத் திருத்திக் கொண்டு பயணிக்க வேண்டும் – என்றார்.

---

**20 வயதுக்கு...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றவர்கள் ஏதேனுமொரு தடுப்பூசி மையத்துக்குச் சென்று அதனைச் செலுத்திக்கொள்ள முடியும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன மேலும் தெரிவித்துள்ளார்.

---

**பொருளாதார...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உணவு மற்றும் மருத்துவப் பாதுகாப்பு, எரிசக்திப் பாதுகாப்பு, நாணயப் பரிமாற்றம் (தற்காலிகப் பண ஏற்பாடு – Currency Swap) உட்பட பல விடயங்களில் இலங்கையைக் கரைசேர்க்கும் அவசரத் திட்டங்களைத் தயாரிப்பதில் இந்தியா மும்முரமாக இருப்பதாக அந்தச் செய்தி தெரிவித்தது.

இலங்கை அமைச்சரின் புதுடில்லி வருகையை அடுத்தே இந்தத் திட்டம் முனைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றது.

உணவு, மருந்து, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இலங்கை இறக்குமதி செய்வதற்கான கடன் வசதிகளைத் தாராளமாக வழங்குவது வரை இந்த அவசரத் திட்டப் பொதியில் அடங்குவதாகவும் கூறப்பட்டது.

இலங்கை தனது சர்வதேச கொடுப்பனவுக் கடப்பாடுகளை செலுத்த முடியாமல் தவறலாம் என்ற கணிப்பு சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள நிலையிலேயே, இலங்கைக்குப் புதிய கடனுதவித் திட்டங்களை வாரி வழங்கி, அதனை நெருக்கடியிலிருந்து மீட்கும் அவசர உதவித் திட்டப் பொதியை இந்தியா மேற்கொள்கின்றது எனச் சுட்டப்படுகின்றது.

---

**முல்லை கடலில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செப்டெம்பர் முதல் ஜனவரி வரையில் முல்லைத்தீவு கடற்பகுதி கொந்தளிப்பாகக் காணப்படும் நிலையில், குறித்த பகுதியில் நீராடுபவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என பிரதேச மீனவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்

---

**யாழ்ப்பாணம்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வருகின்றார். அவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 15ஆம் திகதி இரவு உணவு விருந்து வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து 16ஆம் திகதி யாழில் 800 மீனவர்களிற்கு இலவசமாக வலைகள் வழங்கப்படுவதோடு 2 ஆயிரம் மீனவர்களிற்கு நிவாரணப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன.

இதேநேரம் மன்னார் மாவட்ட மீனவர்களில் 700 பேருக்கு நிவாரணப் பொதிகளும் 150 பேருக்கு வலைகளும் வழங்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை மீன்பிடி அமைச்சு செய்துள்ளது.

இலவசமாக வழங்கப்படும் வலைகள் தலா 8 ஆயிரம் ரூபா பெறுமதியானவை. நிவாரணப் பொதிகள் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியுடையவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இலங்கை, இந்திய மீனவர் இடையே நிலவும் முரண்பாட்டை இந்தியாவின் பகைமை நாடான சீனா இத்தகைய நடவடிக்கை மூலம் வசமாகப் பயன்படுத்த முயல்வதாக சிலர் இதனை விமர்சிக்கின்றனர்.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

நானும் சொல்கிறேனே.....!

✔ காலைக்கதிர் வார இதழின் நானும் சொல்கிறேனே என்னும் இந்தப் பகுதியில் நாங்கள் தரும் விடயத் தலைப்பினூடாக உங்களது அனுபவங்களையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.

✔ சுருக்கமாகவும் சுவையாகவும் எழுதப்படும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு சிறப்புப் பரிசுகளுமுண்டு!



இந்த வாரத்துக்கான தலைப்பு
யாருக்கும் பொறுப்பில்லை!

உங்கள் எழுத்துக்களை எதிர்வரும் 15.12.2021 புதன்கிழமைக்கு முன்னர் பின்வரும் ஏதாவது ஒரு வழிமுறையினூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்

நானும் சொல்கிறேனே.....!
காலைக்கதிர் வாரஇதழ்
Address - No.551 A, Kasthuriyar Road, Jaffna
மின்னஞ்சல் - kalaikkathirweekly@gmail.com
Whatsapp & Viber - 076 443 8622
சமூகவலைத்தளங்கள் - kalaikkathir (காலைக்கதிர்)

காலைக்கதிர் Kalaikkathir

# அரசுக்கு மக்கள் அபிப்பிராயத்தில் மூன்றில் ஒரு பங்கேனும் இல்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அவிசாவளையில் தெரிவிப்பு





அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றியுள்ள போதிலும், நாடாளுமன்றத்துக்கு வெளியே மக்கள் முன்னிலையில் தனது அதிகாரத்தை பரிசோதித்துப் பார்க்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சவால் விடுத்துள்ளார்.

மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளாத அரசாங்கம், இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, அமைச்சரவைக்குக் கூடத் தெரிவிக்காமல், நாட்டின் அனைத்து வளங்களையும் இரகசியமாக வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து வருவதாக அவர் தெரிவித்தார்.

நாடு தற்போது மிக முக்கியமான எரிசக்தி பாதுகாப்பின்மையை எதிர்நோக்கி வருவதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர் அதன் விளைவுகள் மிகவும் துரதிஷ்டவசமாக இருக்கும் என்றும் கூறினார்.

வெளிப்படையாகவே யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அப்பட்டமாகக் களவுத்தனமாக விற்று நாட்டுக்கு பெரிய அழிவை ஏற்படுத்திய அரசாங்கம், நாட்டின் பாதுகாப்போடும் விளையாடிக் கொண்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

முழு நாட்டையும் தவறாக வழிநடத்திய வண்ணம் அரசாங்கம் மேற்கொண்டு வரும் இந்த பாரிய விற்பனைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் எனக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்தால் விற்கப்படும் இந்த தேசிய வளங்களை வாங்க வேண்டாம் என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவில் நடைமுறைப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறியும் 'நகரத்துக்கு நகரம் கிராமத்திற்கு கிராமம் வீட்டுக்கு வீடு' நிகழ்ச்சியின் மற்றுமொரு கட்டம் அவிசாவளையில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அவிசாவளை அமைப்பாளர் தனுஷ்க கொடித்துவக்கு ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் அவிசாவளை முன்னாள் அமைப்பாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான லியோனார்ட் கருணாரத்ன, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் ஆர்.பீரிஸ், அவிசாவளை உதவி அமைப்பாளர் கயான் துமிந்த உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நாட்டில் தற்போது ஏல அரசாங் கமே காணப்படுவதாகத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர், நாட்டு மக்கள் சாப்பிட முடியாமல் பெருமூச்சு விடும் போது கூட இந் நிலை தொடர்பாக அரசாங்கம் கவலைப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். விவசாய சமூகத்தை அடுப்பிலிருந்து சட்டிக்குள் தள்ளிவிட்டுள்ள அரசாங்கம், நாட்டின் அனைத்துத் துறைகளையும் பேரழிவில் ஆழ்த்தியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 50 அத்தியாவசியப் பொருள்கள் நேற்று முதல் குறைந்த விலைக்கு!

### பந்துல அதிரடி நடவடிக்கை



சதொச வர்த்தக நிலையங்களில், 50 அத்தியாவசியப் பொருள்களை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் வருட இறுதி வரையில், சதொச வர்த்தக நிலையங்களில் சில வகையான அரிசிகளை 100 ரூபாவுக்கும் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாடு அரிசி ஒரு கிலோகிராம் 99 ரூபா 50 சதத்துக்கும் சிறந்த சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 130 ரூபா அளவிலும் சதொச வர்த்தக நிலையங்களின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு அரிசி வகையையும் சதொசவில் தலா 5 கிலோகிராம் அளவில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனி ஒரு கிலோகிராம் 125 ரூபாவுக்கும் பருப்பு ஒரு கிலோகிராம் 240 ரூபாவுக்கும் நூடில்ஸ் ஒரு பொதி 125 ரூபாவுக்கும் சவர்க்காரம் உள்ளிட்ட 50 பொருள்களை, சந்தையில் நிலவும் விலையை விடவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## அலைகரை காணியில் குடியிருப்போர் அதனை தமக்கு வழங்க கோரிக்கை

### வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரிடம் விடுப்பு



வவுனியா, பண்டாரிக்குளத்தின் அலைகரைப் பகுதியில் குடியிருக்கும் 32 குடும்பங்கள் அந்தக் காணியைத் தமக்கு வழங்குமாறு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளத்தின் அலைகரைப் பகுதிக்குரிய காணிகளில் வீடுகள் அமைத்து குடியிருக்கும் 32 குடும்பங்களுக்கு எதிராக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு விசாரணைகள் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றன. அதில் 6 பேருக்கு எதிரான வழக்குகள் நிறைவுக்கு வந்துள்ள நிலையில், மேற்படி 6 குடும்பங்களையும் குளத்தின் காணியை விட்டு வெளியேறுமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளதாகக் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து 32 குடும்பங்களும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபனின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டு சென்றமையுடன், சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் பேசி தமக்கு குடியிருப்பதற்கு ஒரு சிறிய நிலத்துண்டை அதில் விட்டுத்தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் இணைச் செயலாளர் கே.டினேஸ் மக்களின் மகஜரைப் பெற்றுக் கொண்டமையுடன், இது தொடர்பில் அபிவிருத்திக் குழுத் தலைவருடனும் தொலைபேசியில் உரையாடியிருந்தார்.

அதன்படி, விரைவில் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் ஆகியோருடன் இணைந்து மேற்படி காணிகளைப் பார்வையிட வருகிறேன் எனவும், அவர்களுடன் பேசி சாதக மான முடிவைப் பெற்று, அதனை நீதிமன்றின் கவனத் துக்கு சம்பந்தப்பட்ட திணைக்களம் ஊடாக கொண்டு செல்வது தொடர்பில் ஆராய்கிறேன் எனவும் தெரிவித்திருந்தார்.

## வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் முதலாவது அமைச்சரவை இன்று கூடுகின்றது

கொழும்பு, டிசெ. 13

2022 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னரான முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இன்று (திங்கட்கிழமை) நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நாடு எதிர்நோக்கும் வெளிநாட்டு கையிருப்பு விவகாரம் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பான உடன்படிக்கை தொடர்பிலும் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காணாமல் போகும் அலுவலகம்

**'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை' என்போம். 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியான போக்கு' என்று சுட்டுவோம்.**

**அந்த நிலைமைதான் இலங்கையில் காணாமல்போனோருக்கான அலுவலகத்துக்கும் ஏற்பட்டுள்ளது.**

**இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரம் பேரின் நிலைமைக்குக் காரணமான 'குற்றவாளிகள்' யார் என்பது பரகசியமான விடயம். சட்ட ரீதியான நீதிமன்ற அமர்வுகளில் அது இன்னார்தான் என நிரூபிக்கப்படாவிட்டாலும், அந்தக் கொடூரங்களைப் புரிந்த 'தேசிய வீரர்கள்' யார் என்பது உலகறிந்த இரகசியம்.**

**ஆள்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட விடயத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இந்த நாட்டில் எண்ணிக்கை அடிப்படையிலான சிறுபான்மையினரான தமிழர்கள்தாம். பல்லாயிரம் அப்பாவிகளை இப்படி வலிந்து காணாமலாக்கப்பட்ட கொடூரத்தில் தொலைத்து விட்டு, அந்த இனம் அந்தரித்துக் கொண்டு நிற்கின்றது. ஆயிரம் நாள்களையும் கடந்து வீதிகளில் குந்தியிருந்து நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்.**

**சர்வதேசத் தரப்புகளின் முன்னால் இந்த விடயங்களை மூடி மறைப்பதற்காக இலங்கை ஆட்சிப் பீடத்தினால் கொண்டு வரப்பட்ட மறைப்பு நடவடிக்கையான காணாமல் போனோர் அலுவலகமும் அடியோடு காணாமல் போகும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.**

**இலங்கையில் பல்லாயிரம் பேர் வரை இப்படி வலிந்து காணாமலாக்கப்பட்ட கொடூரம் தொடர்பில் நீதி முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும், உண்மைகள் கண்டறியப்பட்டு அம்பலப்படுத்தப்பட வேண்டும், பொறுப்புக் கூறல் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றெல்லாம் சர்வதேசத்தின் வற்புறுத்தல் அதிகரித்து வந்துள்ளது. ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் இந்த அழுத்தம் அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளினால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.**

**இந்த நெருக்குவாரங்களைச் சமாளிப்பதற்காக நல்லாட்சி அரசு 'காணாமல்போனோர் அலுவலகம்' என்ற கட்டமைப்பைக் கொண்டு வந்தது.**

**ஆனால் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பில் அந்த ஏற்பாடு தொடர்பில் நம்பிக்கையீனம் தொடர்ந்து வெளிப்படுத்தப்பட்டு வந்தமையால் அந்த முயற்சி முன்நகரவேயில்லை.**

**நல்லாட்சி அரசு கூட, நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷக்கள் உட்பட்ட பேரினவாதத் தரப்பின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே காணாமல்போனோர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்ட மூலத்தை 2016 ஓகஸ்டில் நிறைவேற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.**

**கோட்டாபய அரசு வந்ததும் காணாமல்போனோர் அலுவலகம் முற்றாகக் காணாமல்போகும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.**

**"அப்படிப் பலரும் எதிர்பார்க்கின்றனர், ஆனால் அந்த அலுவலகத்துக்கு உரிய ஆணையாளர்களை நியமித்து அதை நாம் மீளக் செயற்படுத்துகின்றோம்." – என்று கோட்டா அரசின் நீதி அமைச்சர் அலி சப்றி அண்மையில் கூடப் பீற்றிக் கொண்டார்.**

**உண்மையில், அந்த அலுவலகத்துக்கான தலைவர் இன்னொரு ஆணைக்குழுவுக்கு (தகவல் அறியும் உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுவுக்கு) தலைவராக நியமிக்கப்பட்டு விட்டார். ஏழு ஆணையாளர்களைக் கொண்ட அந்த அலுவலகம் இப்போது நான்கு ஆணையாளர்களுடன் தலைவருமின்றிச் செயலிழந்து கிடக்கின்றது.**

**ஜெனிவாவில் சர்வதேசத் தரப்புகளுக்கு காதில் பூச்சுற்றும் நோக்கோடு 2016 ஓகஸ்டில் சட்டம் நிறைவேற்றப்பட்டு உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் காணாமல் போனோருக்கான அலுவலகம், சுமார் ஐந்தரை ஆண்டுகளின் முடிவில் செயலின்றித் தன்பாட்டில் காணாமல் போகும் நிலையை எட்டியிருக்கின்றது என்பதுதான் துரதிஷ்ட நிலைமையாகும்.**

## கனடாவில் ஆர்ப்பாட்டம் செய்த புலம்பெயர் நண்பர்களுக்கு நன்றி!

### சாணக்கியன் தெரிவிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் தெரிந்த சாணக்கியன் என்ற என்னை இன்று உலகம் முழுவதும் அறியப்படுத்தி எனக்கு பிரபலத்தை உருவாக்கியமைக்காக புலம்பெயர் தேசத்திலுள்ள அந்த 25 பேர் வரையிலான நண்பர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சுன்னாகத்தில் உள்ள விருந்தினர் விடுதியொன்றில் கடந்த சனிக்கிழமை வலி.தெற்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதித் தலைவருமாகிய தியாகராஜா பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற 'சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு' நிகழ்வில் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சுமந்திரனை எனக்குப் பிடித்தமைக்குக் காரணம் அவர்மீது அதிக விமர்சனங்கள் பேசப்படுகின்றமையாகும். அதனால்தான் நான் அவர் வழியைப் பின்பற்றுகின்றேன். அவர், தன் மீது முன்வைக்கப்படுகின்ற எந்த விமர்சனத்தைக் கண்டும் வருந்துபவர் அல்லர். விமர்சனத்துக்காக தனது செயற்பாட்டில் பின்வாங்குபவரும் அல்லர்.

கனடாவுக்கு நான் சுமந்திரனுடன் சென்றிருந்தேன். நாம் கூட்டத்துக்கு செல்வதற்கு முன்னரே அங்கு எதிர்ப்பு வெளிப்படுத்துவதற்கு தயாராவதை இணையத்தளங்கள் மூலமாக அறிந்தோம். அதற்காக நாம் பின்வாங்கவில்லை. எதிர்ப்பில் சிலர் ஈடுபடவுள்ளனர் என்று தெரிந்திருந்தும் சென்றோம். சிலர் எதிர்ப்பில் ஈடுபட்டார்கள். அதனால், மட்டக்களப்பில் மட்டும் தெரிந்த சாணக்கியன் என்ற பெயர் உலகம் பூராகவும் அறியப்பட்டுள்ளது. அதற்கு எமது புலம்பெயர் நண்பர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். – என்றார்.

## சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட பிக்குவை உடன் நீக்குமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு, டிசெ. 13

மட்டக்களப்பு, ஏறாவூர் புன்னக்குடா பகுதியில் வசித்து வரும் சிங்கள மக்கள் தங்களது கிராமத்தில் இருக்கும் பிரதான பிக்குவை உடனடியாக நீக்குமாறு கோரி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாக 11 வயது மதிக்கத்தக்க பிக்கு படிப்பினை படிப்பிற்காக வந்த சிறுவன் ஒருவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததன் அடிப்படையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றம் ஊடாக சிறை பிடிக்கப்பட்டு இருந்தார்.

பிணை மனு அடிப்படையில் மீளவும் வெளியில் வந்த பிக்கு குறித்த விகாரையில் தொடர்ந்தும் இருப்பதால் பிக்குவை உடனடியாக நீக்குமாறு கோரியும் தங்களது மாணவர்களது சமய நடவடிக்கைகளுக்கு அனுப்புவதற்கு அச்சம் உள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

## மன்னார் பேசாலைப் பகுதிகளில் டெங்கைக் கட்டுப்படுத்த சிரமதானம்

மன்னார் மாவட்டத்தில் அண்மைக் காலமாக பெய்து வந்த கடும் மழை அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல கிராமங்களில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்ற நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை பேசாலை பகுதியில் பாரிய சிரமதானம் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் சிறுத்தோப்பு, காட்டாஸ்பத்திரி, பேசாலை, முருகன் கோவில் பகுதி, பேசாலை 100 வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள நீர் தொடர்ந்தும் வீடுகளில் தேங்கி உள்ளது.

குறித்த பகுதிகளில் உள்ள பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இன்று வரை உறவினர்கள் வீடுகளில் வாழ்ந்து வரும் நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக குறித்த பகுதிகளில் வெள்ள நீர் ஓடுவதற்கான இயற்கையாக காணப்பட்ட ஓடைகள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களால் முன்னெடுக்கப்பட்ட வடிகால் வசதி மற்றும் காற்றாலை நிர்மாணம் போன்றவற்றால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், வெள்ள நீர் வெளியேற முடியாத நிலை காணப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த கிராமப் பகுதிகளில் டெங்கு நோய் அபாயம் மற்றும் நோய்த்தொற்றுகள் அதிகரித்து காணப்படுகின்றன. பேசாலை பிரதேச பகுதியில் நேற்று வரை 90 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

இந்த நிலையில் பேசாலை கிராம மக்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தமது கிராமங்களில் பாரிய சிரமதானப்பணியை முன்னெடுத்தனர்.

கிராம மக்களுடன் கடற்படை, இராணுவத்தினர் கலந்து கொண்டிருந்தனர். கிராமத்தில் கடற்கரையை அண்டிய பகுதிகளில் மதுபான வெற்றுப் போத்தல்கள் மற்றும் நுளம்பு பெருகக் கூடிய பல்வேறு கழிவு பொருள்கள் கிராம மக்களால் சிரமதானப் பணி மூலம் அகற்றப்பட்டது.

கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்ட பாவனைக்கு உட்படுத்தப்படாத மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன நோய்த் தொற்றுக்கான காரணிகள் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இந்த சிரமதானப்பணி இடம் பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்;

# மைத்திரிக்கு எதிராக சி.ஐ.டியில் முன்னிலையாவதற்கு நான் தயார்

### பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே முழுப் பொறுப்பு என தெரிவித்த கருத்தில் உறுதியாக இருக்கிறேன் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இந்த கருத்து தொடர்பாக குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ தனது வாதத்தை முன்வைக்கத் தயார் என்றும் அவர் கூறியுள்ளார்.

பிரசன்ன ரணதுங்க தெரிவித்தமை தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் ஜூட் கிரிசாந்த குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டால் தனக்குத் தெரிந்த அனைத்துத் தகவல்களையும் வெளியிடத் தயார் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் சுகாதார வழிகாட்டல்கள் அவசியம்!

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

பண்டிகைக் காலங்களில் பொதுமக்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கேட்டுக் கொண்டுள்ளார்.

தடுப்பூசி நடவடிக்கை திருப்திகரமான வகையில் முன்னெடுக்கப்படுவதால் நாடு இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தை மக்கள் பாதுகாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறினால் இந்த ஆண்டு புத்தாண்டுக் கொத்தணி உருவானதைப் போன்று புதிய கொத்தணி உருவாகக் கூடும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலப்பகுதியில் நடத்தப்படும் அனைத்து குடும்ப ஒன்றுகூடல்கள் மற்றும் விழாக்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான இலகுவான வழி ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதே என பலர் கூறினாலும், அத்தகைய நடவடிக்கையால் உள்ளூர் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# சதொச பல்பொருள் அங்காடிகளின் பெயர்ப் பலகைகளில் தமிழ் எங்கே?

### செந்தில் தொண்டமான் கேள்வி

பழைய பெயர் பலகை



புதிய பெயர் பலகை



அரசாங்கத்தின் கீழ் இயங்கும் சதொச பல்பொருள் அங்காடிகளில் மாற்றப்படும் புதிய பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவது கண்டிக்கத் தக்க விடயமென இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி புறக்கணிப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அண்மைக் காலமாக சதொச பல்பொருள் அங்காடிகளில் மாற்றியமைக்கப்படும் புதிய பெயர்ப் பலகைகளில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

இந்த நாட்டின் அரச கரும மொழிகளாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் உள்ளன. சிங்களம் மற்றும் தமிழ் மக்கள் பயன்படுத்தும் அங்காடியாக சதொச உள்ளது. ஆகவே, தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதற்கான காரணம் என்ன?

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளமையுடன், தேசிய மொழிகள் ஆணைக்குழுவின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளேன். உடனடியாக இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளேன். இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளெடுக்கப்படும் என்று நம்புகிறேன்' என்றும் அவர் கூறியுள்ளார்.




# அரச துறையில் திணைக்களங்களுக்கு இடையிலான தேசியதரப்படுத்தலில் யாழ்.மாவட்ட செயலகம் முதலிடம்!

அரச துறை நிறுவனங்களுக்கான வினைத்திறனான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் 2018/2019 ஆம் ஆண்டை தழுவி நடாத்தப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ்.மாவட்ட செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றிருப்பதுடன், அரச துறையில் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான போட்டித் தொடரில் பங்குகொண்ட 14 பிரதேச செயலகங்களும் வெற்றி பெற்றுள்ளன.

அந்த வகையில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முதலாம் இடத்தையும் யாழ்ப்பாணம், தென்மராட்சி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் இரண்டாம் இடத்தையும் சண்டிலிப்பாய், கோப்பாய், கரவெட்டி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகங்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மேலும், உடுவில், காரைநகர், சங்கானை, ஊர்காவற்றுறை மற்றும் வேலணை பிரதேச செயலகங்கள் சிறப்பு மெச்சுரை விருதையும் நெடுந்தீவு பிரதேச செயலகம் மெச்சுரை விருதையும் பெற்றுள்ளது.

அந்தவகையில், யாழ்.மாவட்ட செயலகம் தேசிய ரீதியாக மாவட்ட தரப்படுத்தலில் முதலிடம் பெற்றிருப்பதுடன் பங்குபற்றிய 14 பிரதேச செயலகங்களும் பொதுமக்கள் சேவை வழங்கலில் சிறந்த அங்கீகாரத்துக்கான அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளன எனத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், இந்த வெற்றி யாழ்.மாவட்டம் முழுவதுமான நிர்வாக ரீதியாக கிடைத்த சிறந்த அங்கீகாரம் ஆகும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இது ஒரு பொது மக்கள் சேவை வழங்கலில் உத்வேகம் மற்றும் ஊக்கத்தை மாவட்ட ரீதியாக எடுத்துக்காட்டுவதுடன், எதிர்காலத்திலும் வினைத்திறன் மற்றும் விளைதிறனான பொதுமக்கள் திருப்தியுறும் வகையில் சேவை வழங்கலில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் வலுப்பெறும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், இந்த விருதை பெற்றுக்கொள்ள முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய மாவட்ட மற்றும் பிரதேச செயலக அனைத்து உத்தியோகத்தர்களும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளமையுடன், இந்தச் செயற்பாட்டுக்கான பலமான உற்பத்தித் திறன் கட்டமைப்பை வடிவமைத்து வழிகாட்டல்களை அவ்வப்போது வழங்கியிருந்த உற்பத்தித்திறன் குழுவினருக்கு விசேட நன்றிகளையும் பாராட்டுக்களையும் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த போட்டித் தொடரில் கடந்த 2016 ஆம் ஆண்டில் 3 ஆம் இடத்தையும் 2018 ஆம் ஆண்டில் 2 ஆம் இடத்தையும் பெற்று அரச அலுவலகங்களுக்கு முன்மாதிரியான தனித்துவமான மாவட்டமாக யாழ்.மாவட்டம் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

# அனுராதபுரம், வெலிக்கடை சிறை சம்பவம் தொடர்பில் 18 பேரிடம் வாக்கு மூலம் பதிவு

துப்பாக்கி முனையில் தமிழ் அரசியல் கைதிகள் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை 18 பேரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அத்துமீறி நுழைந்த விவகாரம் தொடர்பாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சிலருக்கு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுத்தார் எனவும் குற்றம் சாட்டப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றவியல் சட்டக் கோவையின் கீழ், விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு கடந்த ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கமைய, விசாரணைகளை முன்னெடுத்த கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு, இதுவரை அநுராதபுரம் சிறையில் உள்ள இரு கைதிகள், 7 சிறை அதிகாரிகள் மற்றும் வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 9 சிறைக் கைதிகளிடம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 209

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**563.ஏன் விலக கோருகிறார்கள்? அப்படியான ஜனநாயக மரபின் படி இவர்கள் விலகுவார்களா? விலகினால் யார் பொறுப்புக்களை ஏற்பார்கள்?**

“ஒரு வருடத்திற்குள் அரசியல் தீர்வு இல்லையேல் பதவி விலகுவோம்” என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் பலமுறை பகிரங்கமாகப் பத்திரிகைகளுக்கும், காணொலி நேர்காணல்களும் செவ்விகள் வழங்கியிருக்கின்றமையையும் பின் பொங்கலுக்கு முன் வரும், தீபாவளிக்கு முன் நிச்சயம் வரும் என்றெல்லாம் இலத்திரனியல் ஊடகங்களில் பதிவேற்றியமையையும் சுட்டிக் காட்டி, இவர்கள் தோற்றுப் போனார்கள் – இயலாதவர்கள் – என ஜனநாயக மரபுகளில் பதவியை விட்டு விலகக் கோருகிறார்கள்.




அந்த மரபுகள் மேலைத்தேய நாடுகளில் கிரமமாகக் கடைப்பிடிக்கப்பட்டாலும் ஆசிய பிராந்தியங்களில் அவற்றுக்கு மதிப்பு இருப்பதில்லை. ஆனாலும் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் சில தடவைகள் பின்பற்றப்பட்டிருக்கின்றன. ஸ்ரீலங்காவில், அதுவும் தமிழர் அரசியல் கலாசாரத்தில் அதை எதிர்பார்க்க முடியாது. கண்மூடும் வரை சம்பந்தன் தலைமையை விட்டுக் கொடுக்கார். மாவை இருப் பதை விடுவதானால் இன்னொன்றுக்கு பேரம் பேசுகிறார். அது போல மற்றவர்களும் பதவிகளைத் தக்க வைக்கவே உபாயங்கள் தேடுவார்கள். எவ்வளவு சத்தியங்கள் செய்திருந்தாலும் அதை ஏற்கும் மனப்பாங்கோ, மனோபாவமோ அவர்களிடத்தில் இல்லை. வரப்போவதும் சாத்தியமில்லை.



அந்த விடாப்பிடித்தனத்தால், பல பிரிவுகளாகக் கூட்டமைப்பு உடைந்துவிட்டது. எவர் பேசுவது தமிழ் தேசியம் என தெரியாமல் இருக்கிறது. ஆனால் எல்லோரும் தமிழ் தேசியத்தைத்தான் முன்னெடுக்கிறோம் என்கிறார்கள்.

**564.இவர்கள் போனால் நிலை என்ன?**

தமிழ்வின்னின் அந்தப் பதிவு –

“தமிழ் அரசியல் பரப்பில் தலைமை தாங்குவதற்கு தகுந்தவர்கள் யாரும் இல்லை என இவர்கள் கவலைப்பட வேண்டியது இல்லை.

“தமிழர்களை வழிநடத்துவதற்கு ஏராளமான ஆளுமைமிக்கவர்களை தமிழ்த்தாய் பிரசவித்து இருக்கிறாள். அத்தகைய புதிய ஆளுமை மிக்கவர்களை வழிநடத்தவிட்டு, தமிழ்த் தேசிய அரசியல் தரப்பிற்கு புதிய இரத்தத்தைப் பாய்ச்சி, தமிழ் மக்களுக்கான தேசிய அபிலாசைகளில் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக்களை அளிக்குமாறு இவ்வளவு காலமும் இனத்துக்காக மாண்டுபோன மக்களினதும், மாவீரர்களினதும் பெயராலும் பதவி விலகிச் செல்லும்படி வரலாறு இவர்களுக்கு கட்டளையிடுகிறது” எனச் சொல்கிறது.

அவர்கள் இப்படி பணிக்கும் போது, 11 டிசெம்பர் 21 இல் “தமிழர் தம் அபிலாசைகளில் சர்வதேச நாடுகளின் கரிசனைகள் தொடர்பாக சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு” என நடந்த கூட்டத்தில் சுமந்திரன் “தேர்தலில் படித்த, ஆற்றலுள்ள இளைஞர்களுக்கு முன்னுரிமை என்று நாங்கள் தீர்மானித்தோம், ஆனால் அது வேட்பு மனுவில் காணப்படவில்லை. 2022 ஆம் ஆண்டு தமிழ் மக்களைப் பொறுத்த வரை மிகமுக்கியமான ஓர் ஆண்டாக இருக்கலாம். சாணக்கியன் போன்ற ஐந்தாறு இளைஞர்களை நாங்கள் களமிறக்கியிருந்தால் நாட்டையே தலைகீழாக மாற்றியிருப்போம்.

“மாறுகின்ற உலகத்திலேயே நாங்கள் நிறைய மாற்றங்களை உள்வாங்க வேண்டும்.

சமஷ்டிஎன்றசொல்அன்றும்இருந்தது, இன்றும் இருக்கிறது. ஆனால் சமஷ்டிக்கான விளக்கம் தற்போது மாறிவிட்டது.” – என்று சொல்லியிருக்கிறார்.

தமிழ்வின் பகுதியும் தலைமை மாற வேண்டும் என்கின்றனர். சுமந்திரனும் அதையே சொல்கிறார். எந்த திக்குக்கு என்பது தான் முக்கியம்.




**565.அதே பேச்சிலேயே, சுமந்திரன் திக் குகள் பற்றி சொல்லியுள்ளாரே?**

13ஐக் கட்டிப்பிடிப்போரை ஏற்றுக் கொள்ளவே முடியாது என அடித்துக் கூறினார் என ஊடக தலைப்புச் செய்தி சொல்கிறது. அதில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்ல முயற்சித்துக் கொண்டிருக்கும் போது, 13 ஆவதை அமுல்படுத்த ஒன்று கூடுகிறோம் என்று சில கட்சிகள் சொல்கின்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவிக்கிறார்.

தலைமைகளில் மாற்றம் வேண்டும் என இரு பெரும் பகுதிகளும் சொல்லும் வேளை, 13க்கு மேலே போகத் தெண்டிக்கிறோம் என சுமந்திரனும், தமிழ் நெற் (Tamil Net) பகுதி, 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அது இனவழிப்பின் ஒரு குச்சியை தன்னும் பிடுங்காது எனச் சொல்கிறது. இந்த இரண்டு பெரும் பகுதிகளுமே 13 ஆவது சரத்தை ஏற்கவில்லை என்றால் கூட்டமைப்பு இந்தியாவை சந்திப்பதை தவிர்த்து அதேசமயம், சுமந்திரன், “சமஷ்டி என்ற சொல் அன்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது. ஆனால் சமஷ்டிக்கான விளக்கம் தற்போது மாறிவிட்டது. மாறுகின்ற உலகத்திலேயே நாங்கள் நிறைய மாற்றங்களை உள்வாங்க வேண்டும்” எனவும் அறிவித்தார்.

**566.கூட்டமைப்பு தேர்தலுக்குச் சென்றபோது கேட்ட சமஷ்டி என்ன? இப்பொழுது சொல்வது சமஷ்டியின் விளக்கம் என்ன?**

நல்லாட்சிக் காலங்களில், சமஷ்டி என்று வெளிப்டையாக பெயரில் அல்ல, அப்படியான அதிகாரங்களோடு, அதிகாரப் பரவல், அந்த அதிகாரப்பரவல்; “ஒற்றுமையான, பிரிக்கப்படாத, பிரிக்க முடியாததான” நாடுக்குள். என்ன மோதகமா, கொழுக்கட்டையா பிள்ளையாருக்குப் பிடிக்கப்படுகிறது என தெரியாமலிருந்தது, அந்த விளக்கங்களால்.

இப்பொழுது மாறுகின்ற உலகத்தின் மாறும் நியதியில் உள்வாங்கப்படும் சமஷ்டியோ, ஏதோ என்றால் இந்த திக்குகள் என்ன? இப்பொழுது மோதகத்திற்கு பல்லுகள் வைக்கப்படுகின்றனவா அல்லது கொழுக்கட்டையின் பல்லுகள் அழிக்கப்படுகின்றனவா, அல்லது பருப்புக்கு பதிலாக பூசணி வைக்கப்படுகிறதா?

சுமந்திரனின், வெளிநாட்டுப் பயணம் தொடர்பான தொடரும் சர்ச்சைகளில் அவர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சு வார்த்தைகளின் போது எந்த நேரத்திலும் இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், பொறுப்புக் கூறல், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பற்றி பேசவேயில்லை, புதிய அரசமைப்புப் பற்றியே பேசினார் எனக் குற்றம் சாட்டுகிறார்கள். அவர் இன்னுமொரு கதிர்காமராக தமிழ் மக்களுக்கு உருவாகிறார் என்றும் ஆத்திரப்பட்டு, தாங்கள் அநாகரிகமாக அவருக்கு எதிர்ப்பு காட்டியது என்பது அபத்தம், தமிழ்மக்களின் வலிகளின் வெளிப்பாடுகளே அவை என்கிறார்கள். கதிர்காமரை மட்டுமல்ல, நீலன் திருச்செல்வமும் கூட அழிக்கப்பட்டார். 12 ஆண்டுகளுக்கு பின்னரும் ஒரு ஒத்த நிலைப்பாட்டிற்கு தமிழ் அரசியல் பரப்புக்கள் வரமுடியாமல், ஏதாவது ஒரு முன்னேற்றத்திற்கு அவர்களிடையே உள்ள ஒரு வளத்தை அடக்க அல்லது அழிக்க வேண்டும் என்ற நிலைக்கு தான் அவர்களைக் கொண்டு வருகிறது. இந்த சாடை, மாடையான மோதல் கொழுக்கட்டை பிடிப்புகள் இலங்கையில் அதுவும் தமிழ் மக்களின் அரசியல் வரலாறுகளை அனுபவங்களை படிக்காததால், அறியாததால், அல்லது அவர்களது சொந்தப் பின்னணியில் சுயநலங்களில் இருந்து கிளம்புகிறது.

(வளரும்)



# உள்நாட்டு, சர்வதேச செயற்பாட்டாளர்கள் கரன்னகொடவின் நியமனத்துக்கு அதிருப்தி



வடமேல் மாகாண ஆளுநராக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட நியமிக்கப்பட்டமை தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச செயற்பாட்டாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

11 இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரத்தில் வசந்த கரன்னகொட சிறையில் இருக்க வேண்டும் என்றும் இதற்கு மாறாக உயர் அதிகாரங்களை வழங்கும் பதவிகளுக்கு அவரை நியமித்தமை தவறு என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் காண்பித்துவரும் அலட்சியப் போக்கை இந்த நியமனம் தெளிவாக வெளிப்படுத்தி இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் இனப்படுகொலை, மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகத் தடைகளை விதிக்க வேண்டிய தருணம் இது என கனேடித் தமிழர் தேசிய அவை கேட்டுக்கொண்டுள்ளது.

தண்டனைகளில் இருந்து தப்பிக்கும் போக்கு இலங்கையில் விரிவடைந்து வருவதாகவும் போர்க் குற்றச்சாட்டு உள்ளவர்கள் நாட்டின் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதன் மூலம் படுகொலை தொடர்பான குற்றச்சாட்டுக்களை மூடிமறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் கனேடிய தமிழர் தேசிய அவை சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்திய ஆய்வாளர் ஷத்யாகி ருவன் பத்திரண அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

11 பேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட வழக்கில் தொடர்புபட்டிருக்கக்கூடிய வசந்த கரன்னாகொட அதற்காக சிறையில் இருக்கவேண்டுமே தவிர, உயர் அதிகாரத்தை வழங்கும் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாது என்று அவர் அந்தப் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருட சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் இலங்கையைப் பொறுத்தமட்டில் குற்றவாளிகள் சட்டத்திலிருந்து தப்பிப்பது மாத்திரமன்றி, அவர்களுக்கு முக்கியமான உயர்பதவிகளும் வழங்கப்படும் என்ற விடயம் நினைவுறுத்தப்பட்டுள்ளது என சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான பவானி பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி இந்த நியமனம் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கு மற்றும் அதிகரித்த இராணுவமயமாக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தியிருப்பதுடன் அரசியல் ரீதியான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் காண்பித்துவரும் அலட்சியப்போக்குத் தொடர்பாக தெளிவான செய்தியையும் வழங்கியிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா பண்ணைக்குள் மாடு நுழைந்தமையினால் கைகலப்பு

## பெண் ஒருவர் உட்பட மூவர் காயம்

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றுக்குள் மாடு நுழைந்தமையால் ஏற்பட்ட கைகலப்பில் பெண் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் அமைந்துள்ள பண்ணை ஒன்றுக்குள் அந்தப் பகுதியில் வசிக்கும் குடும்பம் ஒன்று வளர்க்கும் மாடுகள் உட்சென்றுள்ளன என பண்ணையில் நின்றவர்கள் தெரிவித்துள்ளனர். இதன்போது மாட்டு உரிமையாளர்கள் அந்த இடத்துக்குச் சென்ற போது பண்ணையில் இருந்தோருக்கும், மாட்டு உரிமையாளர்களான கணவன், மனைவிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. மேற்படி வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியதில் பெண் ஒருவரும், பண்ணையில் இருந்த ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து பண்ணையில் நின்றவர்கள் வீதியில் சென்ற போது அங்கு வந்த சிலர் அவர்களை வழி மறித்து தாக்கியுள்ளனர். இதில் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தக் கைகலப்பு சம்பவங்களில் மாட்டு உரிமையாளரின் மனைவியான பெண் மற்றும் பண்ணையில் இருந்தோர் இருவர் என மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (100)

# முல்லைத்தீவில் "மாவீரன் கர்ணன்" என்ற வாசகத்தை காட்சிப்படுத்திய ஓட்டோ சாரதி மீது பொலிஸார் விசாரணை

மாவீரன் கர்ணன் என்ற வாசகம் அடங்கிய வடிவமைக்கப்பட்ட ஸ்டீக்கரை தனது ஓட்டோவின் பின் புறத்தில் ஒட்டிய முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இளைஞர்கள் இரண்டு பேர் முல்லைத்தீவு பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

முன்னதாக மாவீரன் என்ற சொல் பதிக்கப்பட்டிருப்பதற்காகவே வாக்குமூலம் ஒன்றை பெற்றுக்கொள்ள முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு ஓட்டோவோடு வருகை தருமாறு சகோதரர்களான புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த தர்மராசா பிந்துசன் (வயது - 21) மற்றும் தர்மராசா கனிஸ்ரன் (வயது - 19) ஆகியோரை முல்லைத்தீவு பொலிஸார் அழைத்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டிருந்தவேளை ஊடகங்களுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்துக்கும் இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களால் உடனடியாக தொலைபேசி மூலம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால் உடனடியாக கைது நடவடிக்கையிலிருந்து பின்வாங்கிய பொலிஸார் போக்குவரத்து பொலிஸாரின் கடமைக்கு ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை சுமத்தி ஓட்டோவைச் செலுத்திச் சென்ற 19 வயதான இந்த வருடம் உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பாடசாலை மாணவனை கடந்த வியாழக்கிழமை கைது செய்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து மறுநாள் வெள்ளிக்கிழமை மதியம் பொலிஸ் பிணையில் விடுதலை செய்துள்ளனர் எனப் பாதிக்கப்பட்ட சகோதரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஓட்டோ உரிமையாளரான இளைஞர் கருத்து தெரிவிக்கையில் –

எனது ஓட்டோவை என்னுடைய தம்பி கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு நகரத்துக்குக் கொண்டுவந்த நிலையில் முல்லைத்தீவு பொலிஸார் அவரை வீதியில் இடைமறித்து அதற்கு பின்பக்கத்தில் ஒட்டப்பட்டிருந்த 'மாவீரன் கர்ணன்' என்ற ஸ்டீக்கர் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வேறுவிதமாக அந்த ஸ்டீக்கரை சித்திரித்து அவரை கைது செய்யும் முயற்சியோடு அவரது சாரதி அனுமதிப் பத்திரத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறும் கூறி சாரதி அனுமதிப் பத்திரத்தை வாங்கி எடுத்துவிட்டு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு வருகை தருமாறும் கூறி விட்டு சென்றுள்ளனர். மாகாபாரதத்தில் வரும் பாத்திரமான கர்ணன் எமது சமயத்தின் வரலாற்றுக் கதையை கூறும் வகையிலேயே அந்த பாத்திரத்தின்மீது நான் கொண்டுள்ள பற்றின் காரணமாக நான் அந்தப் பெயரை வடிவமைத்து எனது ஓட்டோவல் ஒட்டியிருந்தேன். ஆனால் அந்த மாவீரன் என்ற வாசகத்துக்காகவே என்னைக் கைது செய்யும் முயற்சியில் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு என்னை அழைத்திருந்தனர்.

எனது சகோதரன் ஓட்டோவில் வீடு வந்து சேர முன்பே ஓட்டோவின் பின்னால் ஒட்டப்பட்டிருந்த எனது தொலைபேசி இலக்கத்துக்கு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திலிருந்து அழைத்த பொலிஸார் உங்களது ஓட்டோவை ஓட்டிவந்தவரது சாரதி அனுமதிப் பத்திரம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் உள்ளது. எனவே, விசாரணை ஒன்றை மேற்கொள்ளவேண்டும். உடனடியாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு வாகன உரிமையாளரான நீங்கள் வரவேண்டும் என பொலிஸார் அழைத்ததற்கு அமைவாக நான் பொலிஸ் நிலையம் சென்ற நிலையில் "மாவீரன் கர்ணன்" என எழுதிய வாசகம் இன துவேசத்தை ஏற்படுத்தும் பயங்கரவாதத்தை தூண்டும் விடயம் என இராணுவத்தினரும் புலனாய்வாளர்களும் கண்காணித்தே உங்களது ஓட்டோவைப் பிடித்துள்ளோம் என கூறிய பொலிஸ் அதிகாரி வாக்குமூலம் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததோடு சிவில் உடை தரித்த சில நபர்களையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து எனது அடையாள அட்டை பெயர் போன்ற விடயங்களை பதிந்தும் படம் எடுத்தும் என்னிடம் விசாரணை மேற்கொண்டிருந்த வேளையில் எனது தம்பியையும் பொலிஸ் நிலையத்துக்கு வர கூறுமாறு அழைத்து அவரிடமும் இவ்வாறு நடந்து கொண்டனர்.

இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கும் பிரதேச ஊடகவியலாளர்களுக்கும் உடனடியாக எமது குடும்பத்தினரால் தெரியப்படுத்தப்பட்டதை தொடர்ந்து திடீரென வாக்குமூலம் பெறுவதை நிறுத்தி ஸ்டீக்கர் தொடர்பில் பின்வாங்கிய பொலிஸார் ஓட்டோவை ஓட்டிவந்த எனது தம்பியை போக்குவரத்து பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் சந்தேகத்துக்கிடமாக நடந்து கொண்டமை ஆகிய குற்றசாட்டுகளை சுமத்தி அவரை கைது செய்து பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்தனர்.

ஆனால் எனது சகோதரன் பொலிஸாரின் கடமைக்கு மதிப்புக்கொடுத்து சாரதி அனுமதிப் பத்திரத்தை கேட்கும்போது அவர்களிடம் கொடுத்துவிட்டு வாடகைக்கு ஏற்றிவந்தவர்களை உரிய இடத்தில் இறக்கிவிட்டு மீண்டும் பொலிஸார் கூறியபடி பொலிஸ் நிலையத்துக்கு செல்வதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தார். ஆனால் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணையை அடுத்தே உடனடியாக நடந்த விடயத்தை திசை திருப்பும் விதமாக எனது சகோதரன்மீது பொய்யான முறையில் வழக்குப் பதிவு செய்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரை கைது செய்தமைக்கான காரணத்தை வெளிப்படுத்தி கைதுக்கான பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள நான் பொலிஸ் நிலையம் சென்ற நிலையில் அவ்வாறு கைதுக்கான பற்றுச்சீட்டை வழங்கமுடியாது என பொலிஸார் தெரிவித்தனர். நான் தொடர்ச்சியாக கைதுக்கான பற்றுச்சீட்டு எமக்கு வழங்கவேண்டும் என கேட்டு பொலிஸாரோடு வாதிட்ட பின்னரே சிங்கள மொழியில் எழுதிய பற்றுச்சீட்டை வழங்கினர். நான் எனது சொந்த மொழியில் வழங்குமாறு கோரியபோதும் அவர்கள் அவ்வாறு தரமுடியாது எனக் கூறினர்.




இந்த நிலையில் எனது சகோதரனை வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்துவதாக கூறிய பொலிஸார் பின்னர் அன்றைய தினம் காலை 11 மணிக்கு சிங்களமொழியில் எழுதிய தற்காலிக பொலிஸ் சாரதி அனுமதிப் பத்திர தடை துண்டை (தடகொல)வழங்கி பொலிஸ் பிணையில் 3,300 ரூபா தண்ட பணத்தை விதித்து விடுதலை செய்ததோடு எனது ஓட்டோவின் பின்பகுதியில் ஒட்டப்பட்டிருந்த மாவீரன் கர்ணன் என்ற வாசகத்தையும் அகற்றுமாறு கூறினர். அவ்வாறு அகற்ற முடியாது என நான் கூறினேன் அவ்வாறு நான் அகற்றவேண்டுமாக இருந்தால் என்ன காரணத்துக்காக என குறிப்பிட்டு நீதிமன்றில் முற்படுத்துங்கள் என கூறி அகற்ற மறுத்த நிலையில் எனது ஓட்டோவை விடுவித்தனர்.

ஆரம்பத்தில் மாவீரன் கர்ணன் என்ற வாசகத்துக்காக எம்மை பொலிஸ் நிலையம் அழைத்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவந்த நிலையில் மனித உரிமை ஆணைக்குழுவில் நாங்கள் செய்த முறைப்பாட்டை தொடர்ந்தே விடயத்தை திசைதிருப்பும் வகையில் செயற்பட்டு இன்னும் இரண்டுமாதங்களில் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் எனது தம்பியை கைது செய்து ஒருநாள் பொலிஸ் காவலில் வைத்து மறுநாள் விடுதலை செய்ததோடு எனது சமயத்தின் சரித்திரவரலாற்றோடு தொடர்புபட்ட மாவீரன் கர்ணன் என்ற வாசகத்தையும் அகற்றுமாறு வற்புறுத்தினர். மாவீரன் என்ற வாசகம் எனது மொழியில் உள்ள ஒரு சொல். அந்த சொல்லை எழுதுவதற்கு கூட எமக்கு சுதந்திரம் இல்லையா என்ற கேள்வியை பொலிஸாரின் இந்த செயற்பாடு கேட்க வைக்கின்றது ,கடந்த ஒருவருடங்களுக்கும் மேலாக நான் இந்த வாசகத்தை எனது ஓட்டோவில் ஒட்டியுள்ளேன், ஆனால் இந்த மாதத்தில் மாத்திரம் பொலிஸார் இந்த வாசகம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு இவ்வாறு நடந்துகொண்டமை எனக்கும் எனது சகோதரனுக்கும் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை இந்தியாவிடம் ஒருமித்துக் கோர ஒன்றுகூடிய தமிழ்க் கட்சிகள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்கவில்லை



**தமிழ் பேசும் மக்களுக்கான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை இலங்கை அரசிடமிருந்து பெற்றுக்கொடுப்பதற்காக இந்தியாவிடம் ஒருமித்துக் கோரிக்கைவிடுப்பதற்கு தமிழ் பேசும் கட்சிகள் இணக்கப்பாட்டை எட்டுவதற்காக நேற்று கூடின.**

கொழும்பு குளோபல் டவர்ஸ் தனியார் விடுதில் முற்பகல் 10.30 மணிக்கு இந்த முக்கிய சந்திப்பு ஆரம்பமாகியது.

கூட்டத்தின் தீர்மானத்துக்கமைய இந்தியாவிடம் மேற்படி கோரிக்கையை முன்வைக்கும் எழுத்து மூலமான கடித வரைவு தயார் செய்யப்படவுள்ளது.

நேற்றைய கூட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. அத்துடன் இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் ஆகியனவும் பங்கேற்றிருந்தன.

மேலும், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியனவும் கலந்துகொண்டன.

இந்தக் கூட்டத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனும் பங்கேற்றதோடு, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ஸ்ரீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்கவில்லை என்பதோடு ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, கடந்த நவம்பர் மாதம் 2ஆம் திகதி ஏழு தமிழ் பேசும் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் திண்ணை தனியார் விடுதியில் சந்திப்பில் ஈடுபட்டன.

இதில் பங்கேற்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக் கப்பட்டபோதும் அக்கட்சி இறுதி நேரத்தில் குறித்த சந்திப்பை பிற்போடுமாறு கோரியிருந்தது.

அதேநேரம், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் யாழ்ப்பாணம் செல்வதற்கு ஏதுவான நிலையில் இருந்திருக்கவில்லை.

இந்நிலையில், குறித்த கூட்டத்தில் பங்கேற்ற மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் இலங்கை தமிழரசுக் கட்சியும் இவ்விதமான கூட்டத்தில் பங்கேற்றிருக்க வேண்டும் என்று வலியுறுத்தியதோடு பின்னர் கொழும்பில் திரும்பி சம்பந்தனையும் சந்தித்திருந்தனர்.

அந்தச் சந்திப்பில் சம்பந்தன் கொழும்பில் கூட்டத்தைக் கூட்டுமாறும் அதில் பங்கேற்பதற்கு தான் தயார் என்ற சமிக்ஞையை வெளிப்படுத்தியிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக, கடந்த வெள்ளியன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்தன் (புளொட்) ஆகியோர் கூட்டாக கூட்டமைப்பின் தலைவருக்கு எழுத்துமூலமான கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

அதில், எமது மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வே எமது உறுதியான நிலைப்பாடு என்பதை வலியுறுத்தும் அதேவேளை, அரசமைப்பில் ஏற்கனவே உள்ள 13 ஆவது திருத்தத்தை முற்று முழுதாக நடைமுறைப்படுத்தி அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை உறுதிசெய்து மாகாணசபைத்தேர்தலை விரைந்து நடத்த இலங்கை அரசை வலியுறுத்துவதற்கு இந்தியாவை ஒருமித்து தமிழ் பேசும் கட்சிகள் கோருதல் என்றசெயற்பாட்டைமுன்னெடுப்பதற்குத் தமிழினம் முகங்கொடுத்துள்ள இக்கட்டான அரசியல் சூழ்நிலையை கருத்தில் கொண்டு கூட்டத்தைத் தலைமை தாங்கி செவ்வனே வழிநடத்துவீர்கள் என்று நம்பிக்கை உரித்துடன் கோரி நிற்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தை ஏற்றுக்கொண்ட சம்பந்தன் நேற்று நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

இதேவேளை, கூட்டத்தின் பின்னர் கருத்து வெளியிட்ட சி.வி.விக்னேஸ்வரன்,

தமிழர்களின் நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்ளும் வரையில் சட்ட புத்தகத்தில் இருக்கும் 13ஐ நடைமுறைப்படுத்துங்கள் என்பதே எமது கோரிக்கை என்று தெரிவித்தார்.

இதேவேளை, கூட்டத்தின் பின்னர் கருத்து வெளியிட்ட ரவூப் ஹக்கீம்,

ஜனாதிபதி செயலணி என்ற பெயரில் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை கபளீகரம் செய்யும் செயற்பாட்டை முற்றாக முடிவுக்கு கொண்டுவர 13ஐ அமுல்படுத்த வேண்டியது அவசியம் என்று கூறினார்.

இதேவேளை, கூட்டத்தின் பின்னர் கருத்து வெளியிட்ட மனோ கணேசன்,

13 ஐ நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டிய பிரதான கடமைப்பாடு இந்தியாவுக்கு உண்டு எனத் தெரிவித்தார்.

நேற்றைய கூட்டத்துக்கு தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையென அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.



## ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கலந்துரையாடல் நேற்று யாழ். நகரில்

(இ.கலையமுதன்)

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் அரசியல் தலைவர்கள் பங்கேற்ற கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கட்சியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய மாநாடு டிசெம்பர் 19ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு முன்னேற்பாடாக, மாவட்ட ரீதியாக கட்சியை வலுவூட்டும் வகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் அக்கட்சியின் பிரதி செயலாளர் திலகஸ்ரீ, கொழும்பு மாநகர சபை உறுப் பினர் ராஜி பாஸ்கர், கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் டேவிட் நவரட்ணராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சமகால நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவித்தனர்.

## தகவல் அறியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தகவல் அறியும் சட்டத்துக்குப் பாதிப்பு ஏற்படுத்துவது கவலையளிக்கின்றது.

கூட்டணியொன்றை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு அதனை ஏற்படுத்தியவர்களிடமே உள்ளது.

அதனைச் சரிவர நிறைவேற்றாத பட்சத்தில் கூட்டணி பிளவுபடுவதற்கான வாய்ப்புள்ளது – என்றார்.

## ஆணைக்குழுக்களின் முடிவுகளை ஆராயும் ஆணைக்குழு யாழ் நகரில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.12

இலங்கையில் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதிகளால் நியமிக்கப்பட்ட முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்புக்கள், பரிந்துரைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு அதன் தவிசாளர் ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி நவாஸ் தலைமையில் யாழ் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த ஆணைக்குழு அமர்வு தொடர்பில் எந்தவொரு பகிரங்க அறிவித்தலும் முன்னர் வழங்கப்பட்டிருக்கவில்லை. அரச கட்சியின் ஆதரவாளர்களும் உறுப்பினர்களுமே அதிகமாக நேற்று அதில் கலந்துகொண்டனர். சுமார் 40 பேர் அமர்வில் பங்கு கொண்டிருந்தனர்.

## நாடாளுமன்றத்தில்பலமிருந்தாலும் மக்கள் முன் இந்த அரசு மண்கவ்வும்

### சஜித் திட்டவட்டம்

அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றியுள்ளபோதிலும், நாடாளுமன்றத்துக்கு வெளியே அவ்வாறான ஆதரவு இல்லை என்றும், மக்கள் முன் இந்த அரசு தோற்கடிக்கப்படும் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் மூன்றில் இரண்டு இருக்கின்றது என்பதை நிரூபித்துக் காட்டுமாறும் அவர் சவால் விடுத்தார்.

நாட்டுவளங்களைப் பாதுகாக்க வந்த அரசு அமைச்சரவைக்கும் தெரிவிக்காமல் அனைத்து வளங்களையும் விற்பனை செய்கின்றது என்றும், அரசு விவசாய சமூகத்தை சட்டியில் இருந்து அடுப்புக்குள் தள்ளிவிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவிசாவளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



## இன்று டிசெம்பர் 13 நினைவு தினம்

# நினைவுகளில் எழுத்தாளர் அருண். விஜயராணி

## பாதிப்புற்ற பெண்கள் சார்ந்து ஒலித்த குரல் !

- முருகபூபதி -

வணக்கம்…. பாருங்கோ…. என்னத்தைச் சொன்னாலும் பாருங்கோ, உங்கடை விசாலாட்சிப் பாட்டியின்ர கதையைப்போல ஒருத்தரும் சொல்லேலாது. இந்தக்குடுகுடு வயதிலையும் அந்தப்பாட்டி கதைக்கிற கதையளைக் கேட்டால் பாருங்கோ….வயதுப்பிள்ளைகளுக்கும் ஒரு நப்பாசை தோன்றுது. என்ன இருந்தாலும் திங்கட்கிழமை எண்டால் பாட்டியின்ர நினைவு தன்னால வருகுது. அதனால சில திங்கட்கிழமையில அவவுக்கு தொண்டை கட்டிப்போறதோ இல்லை… வேற ஏதேன் கோளாறோ தெரியாது. இவ வரவே மாட்டா….. பாவம் கிழவிக்கு என்னாச்சும் நேந்து போச்சோ எண்டு ஏங்கித் துடிக்கின்ற உள்ளங்களின்ரை எண்ணிக்கை எத்தனை எண்டு உங்களுக்குத் தெரியுமே…?

“அதனாலை ஒண்டு சொல்லுறன் கோவியாதையுங்கோ… பாட்டியின்ர பிரதியளை இரண்டு மூண்டா முன்னுக்கே அனுப்பி வைச்சியளென்டால் பாட்டி பிழைச்சுப் போகும். தடவித் தடவி வாசிக்கிற பாட்டிக்கு நீங்கள் இந்த உதவியை எண்டாலும் செய்து குடுங்கோ இக்கடிதம் இலங்கை வானொலி கலையகத்திலிருந்து 08.11.1976ஆம் திகதி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திரு. விவியன் நமசிவாயம் அவர்களால் ஒரு பெண் எழுத்தாளருக்கு எழுதப்பட்டது. அந்தப்பெண்தான் விசாலாட்சிப் பாட்டித் தொடரை எழுதியவர்.




அந்தப்பெண் அப்பொழுது பாட்டியல்ல. இளம் யுவதி. அவர்தான் அன்றைய விஜயராணி செல்வத்துரை, அவர் பொறியியலாளர் திரு. அருணகிரியை மணம் முடித்ததும் திருமதி அருண். விஜயராணி என கலை, இலக்கிய உலகில் அறியப்பட்டார். அவரது விசாலாட்சிப் பாட்டி வானொலித் தொடர் சுமார் 25 வாரங்கள் ஒலி பரப்பாகியது.

அருண். விஜயராணி 1954 ஆம் ஆண்டு வடபுலத்தில் உரும்பராயில் ஓவியர் செல்வத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் இளைய புதல்வியாகப்பிறந்தவர். 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி மெல்பனில் மறைந்தார். இன்று அவரின் நினைவு தினம். அதனை முன்னிட்டு இந்த நினைவுப்பதிகை.

அக்காலத்தில் பல வானொலி நாடகங்கள் யாழ்ப்பாண பேச்சு மொழிவழக்கில் ஒலிபரப்பாகின. விசாலாட் சிப்பாட்டிக்குரிய வசனங்களை அந்த உச்சரிப்பிலேயே விஜயராணி எழுதினார்.

சமூகம் குறித்த அங்கதம் அதில் வெளிப்பட்டது. அங்கதம், சமூக சீர்திருத்தம் சார்ந்தது. அதனை அக்கால கட்டத்தின் நடைமுறை வாழ்வுடன் வானொலி நேயர்களுக்கு நயமுடன் வழங்கினார்.

விஜயராணியின் முதலாவது சிறுகதை ‘ல்அவன் வரும்வரை’ இந்து மாணவன் என்ற பாடசாலை மலரில் 1972இல் வெளியானது.

‘தவறுகள் வீட்டில் ஆரம்பிக்கின்றன’ என்ற அவர் எழுதிய மற்றும் ஒரு வானொலி நாடகத்தை பின்னாளில் துணை என்ற பெயரில் தொலைக்காட்சி நாடகமாக இயக்கித் தயாரித்து ரூபவாஹினியில் விக்னேஸ்வரன் ஒளிபரப்பினார்.

தொலைக்காட்சியின் வருகைக்கு முன்னர் மக்களிடம் வலிமையான ஊட கமாக செல்வாக்கு செலுத்தியிருந்தது வானொலி. அதிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையும் வர்த்தக சேவையும் இலங்கைத் தமிழ் நேயர்களுக்கு மாத்திரமன்றி இந்தியாவில் தமிழ் நேயர்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாகத் திகழ்ந்தது.

அதற்கான காரணம்: ஒலிபரப்பின் தரம். ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள். ஒலிபரப்பாளர்களின் குரல் வளம். வானொலிகளிலிருந்த அனைத்து தமிழ் - முஸ்லிம் இல்லங் களிலும் காலை முதல் இரவு வரையில் ஒலித்துக் கொண்டிருந்த இலங்கை வானொலி நிகழ்ச்சிகள் அனைத்து தலைமுறையினரையும் கவர்ந்தது. அந்த நிகழ்ச்சிகளின் பெயர்ப்பட்டியலே நீளமானது.



இதில் தமிழ் - முஸ்லிம் எழுத்தாளர்களை மிகவும் ஆகர்சித்த நிகழ்ச்சிகள் வானொலி நாடகங்கள், இசையும் கதையும், மாதர் மற்றும் கிராம சஞ்சிகை, இளைஞர்களுக்கான சங்கநாதம், சிறுவர்களுக்கான சிறுவர்மலர். இவற்றில் ஏராளமான நாடக எழுத் தாளர்கள், வானொலி கதாசிரியர்கள், சிறுவர் இலக்கியம், சிறுவர் நாடகம், நேயர் கடிதம் எழுதுபவர்கள் அறிமுகமானார்கள். அவ்வாறு வானொலி நேயர்களுக்கு அறிமுகமாகியவர் விஜயராணி.

அவர் கொழும்பில் தெகிவளையில் தமது பெற்றோர் சகோதரங்களுடன் வாழ்ந்த காலப் பகுதியில் - இலங்கை வானொலிதமிழ் நேயர்களினால் வரவேற்பை பெற்றிருந்த சில நிகழ்ச்சிகளுடன் சம்பந்தப்பட்டிருந்தார்.

படைப்பாளியிடம் எழுதிக்கேட்டு ஆக்கங்களை ஊடகங்களில் ஒலிபரப்பிய வானொலியும் - பிரசுரித்த பத்திரிகைகளும் இன்றைய நவீன யுகத்தில் அந்த மரபை கைவிட்டமைக்கு இன்றைய நவீன தொழில்நுட்பம்தான் அதிலும் கணினி - மின்னஞ்சல் - எண்ணிம யுகம் தான் பிரதான காரணம்.

வீரகேசரி வாரவெளியீட்டின் பொறுப்பாசிரியராக பணியாற்றிய பொன். ராஜகோபால் ஈழத்து எழுத்தாளர்களை ஊக்குவித்தவர். 1970 - 1980 காலப்பகுதியில் அவர் சில பரீட்சார்த்த முயற்சிகளையும் வாரவெளியீட்டில் மேற்கொண்டார்.

ஏற்கனவே படைப்பாளிகள் எஸ்.பொன்னுத்துரை, குறமகள்,வள்ளிநாயகி, இ.நாகராஜன், கனகசெந்திநாதன் ஆகியோர் இணைந்து எழுதிய மத்தாப்பு புதினத்தை படித்திருந்த அவர், அதுபோன்றதொரு தொடரை வீரகேசரி வாரவெளியீட்டிலும் வெளியிட விரும்பினார்.

நாளைய சூரியன் என்ற தலைப்பில் ஒருசில பெண் எழுத்தாளர்கள் இணைந்து எழுதும் தொடர் வெளியா னது. முதல் அங்கத்தை அருண். விஜயராணி எழுதியிருந்தார். தொடர்ந்து மண்டூர் அசோக்கா, தாமரைச் செல்வி, தேவ மனோகரி ஆகியோர் எழுதினர்.

இலங்கையில் நான் இருந்தகாலத்தில் அவரைச் சந்திக்கவில்லை. குறிப்பிட்ட நாளைய சூரியன் தொடரை ஒப்புநோக்கும் (Proof Reading) பொழுதே படித்திருந்தேன். அக்கால கட்டத்தில் நாளைய சூரியன் வாசகர்களிடமும் விமர்சகர்களிடமும் வரவேற்பை பெற்றிருந்தமைக்குக்காரணம் அந்தக்கதையின் கருப்பொருள். ஹிப்பிக் கோலத்தில் அலையும் ஒரு பாத்திரம் பற்றிய கதை. ஈழத்து இலக்கியத்தில் அதனை பெண் எழுத்தாளர்கள் எழுதியமையினால் துணிகர முயற்சி என்றும் சில விமர்சகர்கள் சொன்னார்கள்.

பின்னர் சிறிதுகாலம் விஜயராணியின் எழுத்துக்களை பத்திரிகையிலும் காணவில்லை. வானொலியிலும் அவரது படைப்புகள் ஒலிபரப்பாகவில்லை.

வீரகேசரியில் விஜயராணியின் உறவினர் சோம சுந்தரம் ராமேஸ்வரன் பத்திரிகையாளராக பணியிலிருந்த எனது நண்பர். அவர்தான் விஜயராணி திருமணம் முடித்து மத்திய கிழக்கிற்கு கணவருடன் சென்றுவிட்ட தகவலை தெரிவித்தார்.

காலங்கள் சக்கரம் பூட்டியன. விரைந்துவிடும்.

விஜயராணியின் குடும்பத்தினர் கலை, இலக்கியம், இசை, நடனம் முதலான துறைகளில் ஆர்வம் மிக்கவர்கள். விஜயராணியின் தந்தையார் செல்வத்துரை இலங்கையின் மூத்த ஓவியர். யோகர் சுவாமியின் சீடர். இன்றும் நாம் பார்க்கும் நாவலியூர் சோமசுந்தரப் புலவரின் படத்தை தமது ஒளிப்படக்கருவியால் எடுத்த கமரா கலைஞருமாவார்.

அவருடைய தங்கையின் மகன்தான் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் முனியப்பதாசன். விஜயராணியின் மூத்த அண்ணன் சட்டத்தரணி ரவீந்திரன் அரசியல் விமர்சன எழுத்தாளர். அக்காமார், அண்ணன்மாரின் பிள்ளைகள் நடன, இசை அரங்கேற்றம் கண்டவர்கள். இவ்வாறு கலை, இலக்கிய, சமூகப்பார்வையுடன் வாழ்ந்த குடும்பத்திலிருந்து வந்தவர். விஜயராணியின் கணவர் அருணகிரி ஒரு பொறியியலாளர். பெரும்பாலான பெண் இலக்கியவாதிகளின் கணவர்கள் போன்று இவருக்கு இந்தத்துறையில் நாட்டம் இல்லையாயினும் தமது மனைவியின் எழுத்துப்பணிகளுக்கு உற்ற துணையாக விளங்கியவர்.



அதனாலும் விஜயராணி செல்வத்துரை என முன்னர் நாம் அறிந்திருந்தவர் பின்னாளில் இலக்கிய உலகில் அருண். விஜயராணி என்று அறியப்பட்டார்.

அருண். விஜயராணி எழுதத் தொடங்கியகாலம் முதல் பல நாடகங்களை சிறுகதைகளை, வானொலிச் சித்திரங்ளை எழுதியிருந்தபோதிலும் தமது நூல்களை வெளியிடுவதில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை.

அவர் மெல்பன் வந்தபின்னர் எனது இரண்டாவது சிறுகதைத்தொகுதி சமாந்தரங்கள் நூலின் வெளியீட்டு விழாவை 25.06.1989 ஆம் திகதி மெல்பன் வை. டபிள்யூ. சி. ஏ. மண்டபத்தில் நடத்தியபொழுது அருண். விஜயராணியும் உரையாற்றினார். சிட்னியிலிருந்து மூத்த எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரையும் வருகை தந்து உரையாற்றினார். இருவரும் ஆஸ்திரேலியாவில் ஏறிய முதல் மேடையாக அந்த இலக்கிய நிகழ்வு அமைந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# தகுதியுடைய பயனாளிகள் 2,162 பேருக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் வீட்டுத் திட்டம்!

## பிரதமரின் இணைப்புச் செயலர் கீதநாத் பெருமிதம்



**யாழ்ப்பாணம், டிசெ. 13**

**“அரசாங்கத்தின் தூரநோக்குக் கொள்கைக்கிணங்க, கட்சி பேதமற்ற மக்கள் சேவை தொடரும் என்பதை நாம் உறுதிபடக் கூறிக்கொள்கிறோம். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 2,162 வீட்டுத் திட்டங்களுக்கான பெயர்ப்பட்டியல் முழுமையடைந்து, நூற்றுக்கு நூறு சதவீதம் தகுதியுடைய பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் எவ்வித சலுகைகளோ, அரசியல் அழுத்தங்களோ பிரயோகிக்கப்பட நாம் இடமளிக்கவில்லை. இனியும் இடமளிக்கமாட்டோம்.”**

பிரதமரின் இணைப்புச் செயலாளரும், வடக்கு, கிழக்குக்கான விசேட மீள்குடியேற்ற ஒருங்கிணைப்பாளருமான கீதநாத் காசிலிங்கம் ‘கட்சி பேதமற்ற மக்கள் சேவை தொடரும்..!’ என்ற தலைப்பில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவினால் மக்களின் முன் வைக்கப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு இணங்க, மக்கள் நலன்சார்ந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களுக்கான இத் திட்டங்களில் எந்தவித கட்சி பேதங்களோ, பிரதேசவாதங்களோ பார்க்கப்படவில்லை. இத்தகைய நிலையில்தான், வடமாகாணத்தின் யாழ். மாவட்டத்துக்காக அரசாங்கத்தின் வீட்டுத்திட்டங்களை நிறைவேற்றும் பணி முன்னிலைப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கமைய, யாழ். மாவட்டத்துக்கான வீட்டுத்திட்டங்களை எந்தவித அரசியல் பாகுபாடுமின்றி முற்றுமுழுதாக நிறைவேற்றிக்கொடுக்கும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டது. அந்தவாய்ப்பைக் சரியாகப் பயன்படுத்தி, மக்கள் நலன்சார்ந்த வீட்டுத்திட்டங்களை முற்றுமுழுதாக மக்களுக்கு வழங்கக்கூடியதாக இருந்திருக்கிறது. இச் செயற்றிட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு உறுதுணையாய் இருந்த அரசாங்க உத்தியோகத்தர்கள், மக்கள் பிரதிநிதிகள், ஊடக நண்பர்கள் அனைவருக்கும் இத் தருணத்தில் நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.


எம்மீது மக்கள் வைத்த நம்பிக்கையின் வெளிப்பாடாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், பெருவெற்றிநடை போடுகிறது. மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையை நாம் பெரிதும் மதிக்கின்றோம். அம்மக்களின் வாழ்வாதாரத்தை அரசியல், கட்சி பேதமின்றி மேம்படுத்தும் வேலைத் திட்டங்களையும் அபிவிருத்தியையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம். உண்மையான பயனாளிகள் நூறு வீதம் நிச்சயமாகப் பயனடைவர். இதற்கான ஒத்துழைப்பை அனைத்துத் தரப்பினரும் நல்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் இச்சந்தர்ப்பத்தில் முன்வைக்கின்றேன். - என்று தெரிவித்துள்ளார்.

# நினைவுகளில் .....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாம் பலவருடங்கள் இலங்கையிலும் லண்டனிலும் இருந்தும்கூட தமது ஒரு நூலைத்தன்னும் வெளியிட முடியாதிருந்த இயலாமையை அன்று அவர் மேடையில் சொல்லி, அந்த நிகழ்வு தனக்கு முன்மாதிரியாக இருப்பதாக குறிப்பிட்டதுடன், வீரகேசரி வாரவெளியீட்டில் அந்த நிகழ்வு பற்றிய கட்டுரையையும் பின்னர் எழுதியிருந்தார்.

1990ஆம் ஆண்டு நான் சென்னைக்கு புறப்படுவதற்கு முதல்நாள் மாலை தமது கணவருடன் எனது வீட்டிற்கு வந்த அவர், என்னிடம் ஒரு கோவையை கையளித்து, அதில் தனது சிறுகதைகள் இருக்கின்றன எனவும் அதனை சென்னை தமிழ்ப்புத்தகாலயம் அகிலன் கண்ணனிடம் சேர்ப்பித்து அச்சிடுவதற்கு




வழிவகை செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

அன்றைய உரையாடலில் அதற்கு தூண்டுகோலாக இருந்தவர் அவருடைய கணவர்தான் என்பதையும் அறியமுடிந்தது.

விமானத்திலேயே அந்தக் கதைகளின் மூலப்பிரதிகளை படித்தேன். தமிழகத்தின் பிரபல ஓவியர் மணியம் செல்வன் வரைந்த முகப்போவியத் துடன் அந்த நூல் கன்னிகா தானங்கள் என்ற பெயரில் சென்னை தமிழ்ப்புத்தகாலய வெளியீடாக வந்தது.

21-04-1991ஆம் திகதி கன்னி காதானங்கள் மெல்பனில் அதே வை. டபிள்யூ. சி. ஏ. மண்டபத்தில் பேராதனை பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி காசிநாதர் தலைமையில் நடந்தது. இலங்கை வானொலியின் முன்னாள் தமிழ்ச்சேவைப்பணிப்பாளர் திருமதி பொன்மணி குலசிங்கம் வருகைதந்து வாழ்த்துரை வழங்கியபொழுது அருண். விஜயராணியின் வானொலி நிகழ்ச்சிப் பங்களிப்புகளை நினைவுபடுத்தினார்.

குறிப்பிட்ட கன்னிகா தானங்கள் நூலை தமிழகத்தில் வாசித்த சுஜாத்தா ராணி என்பவர் Indian Express Weekend இதழில் நல்லதொரு விமர்சனம் எழுதியிருந்தார். அதனையும் தினகரன் வாரமஞ்சரியில் அந்தனி ஜீவா - தேவமலர் என்ற புனைபெயரில் எழுதிய பெண்பிரம்மாக்கள் என்ற தொடரில் அருண். விஜயராணி பற்றி எழுதியிருந்த குறிப்புகளையும் சிட்னியிலிருந்து கவிஞர் பாஸ்கரன், எஸ்.பொன்னுத்துரை, மாத்தளை சோமு இலங்கையிலிருந்து பொன். ராஜகோபால், சுடர் இதழ் ஆசிரியராகவிருந்த கனக சிங்கம் (பொன்னரி) மெல்பனிலிருந்து ரேணுகா தனஸ்கந்தா, முருகபூபதி, குவின்ஸ்லாந்திலிருந்து வானொலிக் கலைஞர் சண்முகநாதன் வாசுதேவன் ஆகியோர் எழுதிய குறிப்புகளையும் தொகுத்திருந்த சிறிய பிரசுரமும் அன்றையதினம் வெளியிடப்பட்டது.

அருண். விஜயராணியின் மெல்பன் வருகையின் பின்னர் இங்கும் சில கலை, இலக்கிய முயற்சிகள் தோன்றின. 1990 தொடங்கப்பட்ட ஆஸ்திரேலியா தமிழர் ஒன்றியத்தின் கலாசார செயலாளராக அவர் அங்கம் வகித்தமையுடன் சங்கத்தின் வெளியீடான




ஆஸ்திரேலியா முரசுவின் ஆசிரியராகவும் பணியாற்றினார். சிட்னி - மெல்பன் குவின்ஸ்லாந்து தமிழ்வானொலிகளிலும் அவருடைய பல படைப்புகள் ஒலிபரப்பாயின. கவியரசு கண்ணதாசனின் திரைப்படப் பாடல்களில் இழையோடிய தத்துவக் கருத்துக்களையும், சமூகம், மொழி, பெண்கள் தொடர்பான சிந்தனைகளையும் தொகுத்து தொடர்ச்சியாக உரைச்சித்திரங்களை எழுதி வான் அலைகளில் பரப்பினார்.

மல்லிகை அவுஸ்திரேலியா சிறப்பு மலரை நாம் 2000 ஆம் ஆண்டு இறுதியில் வெளியிட்டபொழுது, அந்த முயற்சிக்கு பக்கபலமாக இருந்தார். அதில் இவர் எழுதிய தொத்து வியாதிகள் என்ற சிறுகதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்ந்த தமிழக கவிஞ தமிழச்சி சுமதி தங்கபாண்டியன் தாம் விரிவுரையாளராக பணியாற்றிய சென்னை இராணி மேரி மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கொன்றில் விமர்சித்திருக்கிறார். தமிழச்சி சுமதி தங்கபாண்டியன் தற்போது இந்திய நாடாளுமன்றில் உறுப்பினராக விளங்குகிறார்.

அருண். விஜயராணியின் கன்னிகாதானங்கள் தொகுப்பில் இடம்பெற்ற சிறுகதைகளை கனடாவில் வதியும் சியாமளா நவரத்தினம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ஆயினும் அந்த ஆங்கில வெளியீடு வெளிவருவதில் தொடர்ந்தும் தாமதம் நீடிக்கிறது.

அருண். விஜயராணி எமது ஆஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம் - இலங்கை மாணவர் கல்வி நிதியம் முதலானவற்றிலும் அங்கம் வகித்து இவற்றின் வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கியவர். அத்து டன் இந்த அமைப்புகளின் தலைவியாகவும் சில வரு டங்கள் பணியாற்றினார். நாம் தொடர்ந்து நடத்தி வரும் தமிழ் எழுத்தாளர் விழாக்களிலும் அவரது ஆதரவு தொடர்ந்தது.

ஒருவிழாவில் இவருடைய முயற்சியினால் வெளியான மறைந்த எழுத்தாளர் முனியப்பதாசனின் சிறுகதைத்தொகுதி இலங்கையில் அச்சிடப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதனை மல்லிகைப்பந்தல் ஊடாக வெளியிட்டிருந்தார். முனியப்பதாசனின் கதைகளை தேடி எடுத்து தொகுத்தவர் செங்கை ஆழியான்.

இவர்களும் மல்லிகைப்பந்தலும் இல்லையேல் அந்தத் தொகுப்பு வெளிவந்தே இருக்காது. முனியப்பதாசனை ஈழத்து இலக்கிய உலகம் மறந்திருந்த வேளையில், அவரை நினைவுபடுத்திய இலக்கியத் தொகுப்பாக அந்த நூல் அமைந்தது.

சில தமிழ் இணையத்தளங்களில் நிறைவடைந்த விழுதல் என்பது எழுகையே என்ற மெகா தொடர்கதைத் தொடரை புகலிட நாடுகளிலிருந்து பல படைப்பாளிகள் எழுதினர். அதிலும் அருண். விஜயராணியின் ஒரு அத்தியாயம் இடம்பெற்றது.

சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் வீரகேசரியில் நாளைய சூரியன் தொடர்கதையில் சம்பந்தப்பட்டிருந்த அருண். விஜயராணி, மீண்டும் எழுதி அங்கம் வகித்த தொடர் சர்வதேசப் பார்வையுடன் நிறைவுபெற்றது.

படைப்பாளிகளின் படைப்புமொழி மாறிக்கொண்டிருக்கிறது. வெளியீட்டுச்சாதனங்களும் ஊடகங்களின் வடிவங்களும் காலத்துடன் மாறிக்கொண்டிருக்கின்றன.

இந்த மாற்றங்களுக்கு மத்தியில் அருண். விஜயராணி, தமிழ் இலக்கிய பரப்பில் பலதரப்பட்ட கால கட்டங்களில் எழுதிக்கொண்டிருந்தாலும் அவருடைய குரல் பாதிக்கப்பட்டவர்கள் சார்ந்து, குறிப்பாக பெண்கள் சார்ந்தே ஒலித்துக்கொண்டிருந்தது.

அருண். விஜயராணி 2015 ஆம் ஆண்டு மெல்பனில் மறைந்ததையடுத்து வெளியான விஜயதாரகை மலர் அவரது நினைவுகளை பதிவுசெய்துள்ளது.

# போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவருக்கும் பிரதமர் மஹிந்தவுக்கும் இடையில் சந்திப்பு

போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் கலாநிதி செய்யதினா முஹத்தல் செய்ஃபுத்தின் சஹெப், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை கடந்த சனிக்கிழமை அலரி மாளிகையில் சந்தித்தார்.

உலகம் முழுவதும் வாழும் சுமார் மில்லியன் கணக்கான போரா சமூகத்தினருக்கு கலாநிதி செய்யதினா முஹத்தல் செய் புத்தின் சஹெப் தலைமை வகிக்கிறார்.

தான் நேசிக்கும் ஒரு நாடு என்ற ரீதியில் இலங்கைக்கு மீண்டும் விஜயம் செய்யக் கிடைத்தமை தொடர்பாக மகிழ்ச்சியடைகிறேன் என கலாநிதி செய்யதினா முஹத்தல் செய் புத்தின் சஹெப் பிரதமரிடம் குறிப்பிட்டார்.

முழு உலகமும் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள சூழலில் நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் தடுப்பூசி ஏற்றும் செயற்பாட்டை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளமையை பாராட்டுகிறேன் எனவும் கலாநிதி செய்யதினா முஹத்தல் செய் புத்தின் சஹெப் தெரிவித்தார்.

வர்த்தக செயற்பாடுகளின் ஊடாக இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு போரா சமூகத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் பணியை இதன்போது பிரதமர் பாராட்டினார்.

குறித்த சந்தர்ப்பத்தில் போரா ஆன்மீகத் தலைவர் உள்ளிட்டோரும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் கலந்து கொண்டிருந்தார்.



# சுமார் 300 கிலோ எடையுள்ள கடலாமையுடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், டிசெ. 13

சுமார் 300 கிலோ கிராம் எடையுள்ள கடலாமையை பிடித்து வந்த ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவாந்துறையைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் உடைமையிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆமை உயிருடன் உள்ளமையால் நீதிமன்றின் அனுமதியுடன் குறிகாட்டுவான் கடலில் மீள விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சப் இன்ஸ்பெக்டர் மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

## அத்தியாவசிய உணவுகளுக்கு தட்டுப்பாடு பண்டிகைக் காலத்தில் மீண்டும் வரலாம்?

கொழும்பு துறைமுகத்தில் சுமார் 1,500 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்கள் விடுவிக்க முடியாமல் தேங்கியுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக பணம் செலுத்தி அவற்றை விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுமென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கொள்கலன்களில் உருளைக்கிழங்கு, கடலை, செத்தல் மிளகாய், பருப்பு மற்றும் மசாலா உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருள்கள் இருக்கின்றன எனவும் அவற்றின் மதிப்பு 15 கோடி டொலர் முதல் 20 கோடி டொலர் வரை இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

## ஒமிக்ரோன் வைரஸ் பரவல் தீவிரம் நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை!

நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் திரிவு இனங்காணப்பட்டிருப்பதால் பண்டிகைக் காலத்தில் பொறுப்புடன் செயற்படுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரான விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் மக்களிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இம்மாதம் மற்றும் ஜனவரி மாதங்களில் மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## எரிவாயு காஸ் அடுப்பு கொட்டகலையில் வெடிப்பு



திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் தோட்டம் கே.ஓ. பிரிவில் உள்ள வீடு ஒன்றில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேநீர் தயாரிப்பதற்காக எரிவாயு அடுப்பை பற்ற வைத்துள்ளனர். 5 நிமிடங்களுக்கு பிறகு அடுப்பு வெடித்துள்ளதாக வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித் தனர்.

வெடிப்பை அடுத்து எரிவாயு அடுப்பு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், அதன்பின்னர் எரிவாயு சிலிண்டர் உள்ளிட்ட உபகரணங்களை அகற்ற நடவடிக்கை எடுத்தோம் என வீட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறையில் வைக்கப்பட்ட புத்தர் சிலை ஒரே இரவில் அங்கிருந்து அகற்றப்பட்டது

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சங்கமன்கண்டியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை வைக்கப்பட்ட புத்தர் சிலை, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்கள் வாழும் சங்கமன்கண்டி பகுதியிலுள்ள மயானத்துக்கு முன்பாக உள்ள அரசகாணியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்தப் பிரதேச மக்கள் இந்த நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டதோடு, தமிழ் அரசியல்வாதிகளும் இந்த நடவடிக்கைக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

இதனால் புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்த பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டமையை அடுத்து, பொலிஸார் பொத்துவில் பிரதேச செயலாளர், பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்ட பல அதிகாரிகள் அந்த இடத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இந்த நிலையில், குறித்த சிலையை வைப்பதற்கு முறையான அனுமதியை பிரதேச சபையில் பெற்றிருக்கவில்லை எனத் தெரிவித்து, பொத்துவில்



பொலிஸ் நிலையத்தில் பொத்துவில் பிரதேச சபையின் செயலாளர் முறைப்பாடொன்றையும் பதிவு செய்திருந்தார்.

இவ்வாறான எதிர்ப்புகளையடுத்து சங்கமன் கண்டி பகுதியில் வைக்கப்பட்ட சிலையை இரண்டு நாள்களுக்குள் அங்கிருந்து அகற்றுகிறோம் என பொலிஸார் சனிக்கிழமை வாக்குறுதி வழங்கினர். இதனால், சிலை வைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தோர் அங்கிருந்து சென்றனர்.

இந்தப் பின்னணியிலேயே சங்கமன்கண்டி பகுதியில் வைக்கப்பட்ட புத்தர் சிலை தற்போது அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2021 இல் வெளியிடப்பெற்றது.